


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், குழந்தை கடத்தல் தடுப்பு மற்றும் போதை பொருள் தடுப்பில் சிறந்து விளங்கியமைக்காக ஒன்றிய அரசின் விருது பெற்ற மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், சமூக பாதுகாப்பு இயக்குநர் அமர் குஷ்வாஹா ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சி. ஃபெர்னான்டஸ் ரத்தின ராஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சி. விஜயராஜ் குமார், சிறுபான்மையினர் நல மேலாண்மை இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் ஆகியோர் உள்ளனர்.

## ஆஸ்திரேலியா - மெல்போர்ன் பல்கலைக் கழகத்தில்

# வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆய்வு!

## பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல்!

சென்னை, ஜூலை 25 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு பணிகள் தொடர்பான ஆய்வுகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணமாக சென்றுள்ளது.

இக் குழுவில் வேளாண்மை உழவர் நலத்துறையின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் உட்பட்ட உயர் அதிகாரிகள் உடன் சென்றனர்.

இப்பயணத்தின் முதற்கட்டமாக நேற்று 24.07.2024 ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில்நுட்ப பங்குகள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் காலநிலை மாற்றம், புதிய வகை பயிரினங்கள் அறிமுகம், வேளாண்மை - உழவர் நலத்துறையில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது, மண்வளம் காப்பதற்கான நடவடிக்கை, பூச்சிநோய் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காப்பது, உயர் தொழில்நுட்ப வேளாண்மை முறைகளைத் தீவிரப்படுத்துவது, தோட்டக்கலை பயிர்களான பழ வகைப்பயிர்கள் மற்றும் மருத்துவ பயிர்களை கையாளுதல், அனைத்து வகை பயிர்களிலும் அறுவடைக்கு பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிகாட்டு முறைகளை, உணவு வகைப் பயிர்களில் புதுமையை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான பயிற்சியை மேம்படுத்துதல், வேளாண்மைப் பாடங்கள் பயிலும் மாணவர்களின் திறமைகளை மேம்படுத்துதல் போன்றவை விவாதிக்கப்பட்டன.

வேளாண்மைத் தொழில் அரசு/துறை தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட கருத்து பரிமாற்றங்களை முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று தமிழ் நாட்டில் நடைமுறைப் படுத்தப்படும்.



இளைஞர் நலன் மற்றம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, நேற்று (24.7.2024) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அருட்தந்தை ஜோ அருண் – துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அப்துல் குத்தூஸ் மற்றும் ஆணையத்தின் புதிய உறுப்பினர்களையும், சிறுபான்மையினர் பொருளா தாரம் மேம்பாட்டு கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஹாமில்டன் வெல்சன், ஏ. சுவர்ணராஜ், நாகூர் ஏ.எச். நஜிமுதின், பிரவீன் குமார் தாட்டியா, ராஜேந்திர பிரசாத், எம். ரமீத் கபூர், ஜே. முகமது ரஃபி, எஸ். வசந்த் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சி. விஜயராஜ் குமார், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆணையர் வி. சம்பத், சிறுபான்மையினர் நல மேலாண்மை இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம், ஆகியோர் உள்ளனர்.

# திருவள்ளூர் மாவட்டம் மெய்யூரில் - மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர் 25;

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை தாலுகா பூண்டி ஒன்றியம் மெய்யூர், ராமதண்டலம், சித்தம்பாக்கம், எறையூர், மொன்னவேடு, தேவந்தவாக்கம், மாமண்டூர் ஆகிய ஊராட்சிகளுக்கான மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் மெய்யூர் பகுதியில் நடைபெற்றது .

இதில் ஊத்துக்கோட்டை தாசில்தார் மதன் தலைமை தாங்கினார்.

இம் முகாமில் சிறப்பு அழைப்பாளராக திரு வள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் கும்மி டிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமை தொடங்கி வைத்து பொதுமக்கள் விவசாயிகள் இளைஞர்கள் வியாபாரிகள் பொதுநல சங்கத்தினர்கள் கோரிக்கைகளை கேட்டு அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் தொடர்ந்து பட்டா மற்றும் காப்பீடு அடையாள அட்டை , மருத்துவ உபகரணங்கள் ஆகியவை வழங்கினார்

இதில் பூண்டி ஒன்றிய செயலாளர் டிகே.சந்திரசேகர், பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஜான் பொன்னுசாமி, ஒன்றிய குழு துணைத்தலைவர் மகாலட்சுமி மோதிலால் ,அவைத்தலைவர் சக்கரவர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் லாவண்யா சரத்பாபு, ஒன்றிய கவுன்சிலர் தேன்மொழி ஏழுமலை, தில்லைகுமார், பி.ஜோதீஸ்வரன், சீனிவாசன், விஜயன், ஜி. ரவிக்குமார், ராமாராவ். ஸ்ரீராமுலு, குப்பன், வெங்கடாதிரி, டார்த்தி, ஆர்.ரகு, பூபால உள்பட வருவாய் துறை, காவல் துறை, மின்சாரத்துறை, வீட்டு வசதி வாரியத்துறை, மாற்றுத்திறனாளி நலத்துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# வேப்பம்பட்டு பகுதியில் மக்களுடன் முதல்வர் முகாம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்

திருவள்ளூர், ஜூலை 25 -

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், 25 வேப்பம்பட்டு 26 வேப்பம்பட்டு பெருமாள் பட்டு ஆகிய ஊராட்சிகளுக்கு மக்களுடன் முதல்வர் முகாம் வேப்பம்பட்டு பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இம்முகாமிற்கு ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் தலைமை தாங்கினார். வட்டாட்சியர் செ.வாசுதேவன், ஒன்றிய திமுக செயலாளர் சே.பிரேம் ஆனந்த், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ.) எம்.ஜி.குணசேகரன், (கி.ஊ.) கே.ரவி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சதாபாஸ்கர் , ராஜேஸ்வரி சேகர் , ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டு மனுக்களை பெற்று சிறப்புரையாற்றினர்

இதில் பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், ஒன்றிய நிர்வாகிகள் மு.ராஜா, இ.என்.சேகர், மற்றும் செவ்வை கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டார்கள் இதன் முன்னதாக பெருமாள் பட்டு ஊராட்சியில் உள்ள ரயில் நகர் பகுதியில் பொதுமக்கள் சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர் இந்த நிலையில் அதற்கான 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய சாலை அமைக்கும் பணி மற்றும் கால்வாய் அமைக்கும் பணியும் துவக்க விழா நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆர். ஜெயசீலன் முன்னிலையில் பணிகளைத் தொடங்கி வைத்தார் இதில் ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.பரமேஸ்வரன், டி.தரணி, எம்.சக்திவேல், கஜேந்திரன், கௌரிகஜெந்திரன், எஸ்.நடராஜன், ராஜா(எ) ஏழுமலை, கோபி கிருஷ்ணன், முகுந்தன், ராஜராம்,ராமசந்திரன், துரைராஜ், பௌரோஸ், துரைராஜ், அகஸ்டீன், விக்னேஸ்வரன், ரமேஷ் கண்ணன் உள்பட பலர் உடனிருந்தனர்.

## நிபா வைரஸ் எதிரொலி :

# தேசிய நிபுணர்கள் குழு கேரளாவில் முகாம்!

திருவனந்தபுரம், ஜூலை 25 –

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்குவதற்கு முன்னதாகவே பல்வேறு காய்ச்சல்கள் மற்றும் தொற்று நோய்கள் பரவ தொடங்கின. இந்நிலையில் பருவமழை தீவிர மடைந்ததால் தொற்று நோய்களின் பாதிப்பு அதிகரித்தது.

அங்கு வழக்கமான காய்ச்சல்களான டெங்கு, டைபாய்டு, எலி மற்றும் பன்றி காய்ச்சல்கள் மட்டுமின்றி வெஸ்ட் நைல், ஷிகல்லா, அமீபிக் மூளைக்காய்ச்சல் உள்ளிட்ட அரிய வகை நோய்களும் பரவின. காய்ச்சல் பாதிப்புக்கு உயிரிழப்புகளும் ஏற்பட்டதால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டது.

இந்தநிலையில் மலப்புரம் மாவட்டம் பாண்டிக்காடு அருகே உள்ள செம்பரசேரி பகுதியை சேர்ந்த 14 வயது சிறுவன் கடந்த சில நாட்களுக்கு முன்பு நிபா வைரசுக்கு பலியானான். காய்ச்சலால் அவதிப்பட்டு வந்த நிலையில் கோழிக்கோடு அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவனுக்கு நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் தீவிர சிகிச்சை அளித்தும் அந்த சிறுவன் பரிதாபமாக இறந்தான். இதையடுத்து நிபா வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கையில் மாநில சுகாதாரத் துறை களமிறங்கியது. பலியான சிறுவனின் தொடர்பில் இருந்தவர்களின் பட்டியலை தயார் செய்தது.

குடும்பத்தினர், உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், நண்பர்கள் என 460 பேர் தொடர்பு பட்டியலில் இடம் பெற்றனர். அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. அவர்களில் ஆபத்தான பிரிவில் 220 பேர் உள்ளனர். அவர்களை சுகாதாரத்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

தொற்று அறிகுறிகள் உள்ள 19 பேர் வெவ்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுகிறார்கள். சிறுவனுடன் தொடர்பில் இருந்தவர்களிடமிருந்து மாதிரி சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. நெருங்கிய உறவினர்கள் 17 பேருக்கான பரிசோதனை முடிவு நேற்று வந்தது. அதில் அவர்களுக்கு தொற்று பாதிப்பு இல்லாதது உறுதி செய்யப்பட்டது.

இந்த தகவலை மாநில சுகாதாரத்துறை மந்திரி வீணா ஜார்ஜ் தெரிவித்தார். மேலும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் 21 நாள் தனிமைப்படுத்தலை தொடரவேண்டும் என்றும், நெறிமுறைகளை மீறுவோர் மீது பொது சுகாதார திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் நிபா வைரஸ் பாதிப்பு உள்ள இடங்களில் ஆய்வு செய்வதற்காக புனேவில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்தை சேர்ந்த டாக்டர் பாலசுப்பிரமணியன் தலைமையினான நிபுணர்கள் குழு கேரளா வந்தது. அவர்கள் தொற்று பாதித்த பகுதியில் வவ்வால்களின் மாதிரிகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் புனே வைராலஜி நிறுவனத்தில் இருந்து ஒரு மொபைல் பரிசோதனை வாகனம் கோழிக்கோட்டுக்கு வந்துள்ளது.

அந்த வாகனத்தில் தொற்று அறிகுறிகள் உள்ளவர்களிடமிருந்து சேகரிக்கப்படும் மாதிரிகளை உடனடியாக பரிசோதனை செய்ய பயன்படுத்தப்பட்டு வருகிறது. காய்ச்சல் பரவலை கண்காணிக்கும் விதமாக கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினர் அனக்காயம் மற்றும் பாண்டிக்காடு ஊராட்சிகளில் 7ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு சென்று காய்ச்சல் பாதிப்பு பற்றிய தகவல்களை சேகரித்துள்ளனர்.

அனக்காயம் ஊராட்சியில் 95 குழுக்களும், பாண்டிக்காடு ஊராட்சியில் 144 குழுக்களும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றன. அது மட்டுமின்றி இந்த 2 ஊராட்சிகளிலும் 18ஆயிரம் வீடுகளில் சுகாதார பணியாளர்கள் ஆய்வு செய்திருக்கின்றனர்.



ஆலந்தூர் மண்டலம் 12–இல் கட்டப்படவுள்ள மண்டல அலுவலகத்தை சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபன் நேற்று ஆய்வு செய்தார். உடன் மண்டல குழு தலைவர் – பகுதிச் செயலாளர் என். சந்திரன், வடக்கு பகுதிச் செயலாளர் குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், வட்டச் செயலாளர் நடராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## திருவெறும்பூர் - மலைக்கோயில் என்றழைக்கப்படும்

# எறும்பீஸ்வரர் ஆலயத்தில் ஆய்வு!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்டனர்!

திருச்சி, ஜூலை 25 -

திருச்சி திருவெறும்பூரில் அமைந்துள்ள மலைக்கோயில் என்று அழைக்கப்படும் ஸ்ரீநறுங்குழல் நாயகி உடனுறை எறும்பீஸ்வரர் ஆலயத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கோவிலில் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு நடத்தினர் .

திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற தலமாகவும், காவிரி தென்கரையில் அமைந்துள்ள ஏழாவது தலமாகவும் உள்ள சிறப்புமிக்க பழமை வாய்ந்த ஸ்ரீ நறுங்குழல் நாயகி உடனுறை எறும்பீஸ்வரர் ஆலயம் திருச்சி மாவட்டம் திருவெறும்பூரில் அமைந்துள்ளது. தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஆலயத்தில் 1998 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. அதன் பிறகு குடமுழுக்கு நடைபெறாமல் இது வரை உள்ளது. இந்த நிலையில் குடமுழுக்கு பணிகள் நடைபெற வேண்டுமென அப்பகுதி மக்கள் பக்தர்களும் கோரிக்கை விடுத்த நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு பாலாலயம் செய்யப்பட்டது.

தொடர்ந்து குடமுழுக்கு நடைபெறும் என்று எதிர்பார்ப்பில் இருந்த நிலையில் இது வரை அதற்கான முன்னேற்பாடுகள் எதுவும் நடைபெறாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் இந்து சமய அறநிலையத் துறைக்கு கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் திருச்சிக்கு பல்வேறு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, மற்றும் பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் எறும்பீஸ்வரர் ஆலயத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது ஆலயத்தில் அடிவாரத்தில் அமைந்துள்ள தெப்பக்குளத்தை பார்வையிட்டு பின் 128 படிகள் ஏறி மலைமேல் சென்று சிவபெருமான் வழிபட்டனர். தொடர்ந்து அங்கு நடைபெறக்கூடிய கோவில் திருப்பணிகள் குறித்து இரு அமைச்சர்களும் ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது,

கோவில் திருப்பணிகள் முழு வீச்சில் நடைபெறவும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிகள் எந்த அளவில் நடைபெறுகிறது என்பது குறித்தும் அதேபோல் அனுமதிக்காத பணிகளுக்கு தொல்லியல் துறையிடம் அனுமதி பெறுதல் குறித்தும், தெப்பக்குளம் பராமரிப்பு, விநாயகர் சன்னதி புதுப்பித்தல், முன் மண்டபம் சீரமைத்தல் ,உள்ளிட்ட பல்வேறு பணிகளை விரைவு படுத்த வேண்டி இந்து சமய அறநிலைத்துறையிடம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் இன்று இந்த ஆய்வானது நடைபெற்றது. கூடிய விரைவில் அமைச்சர், மாவட்ட ஆட்சியர் தொல்லியல் துறை அதிகாரிகள்,

இந்து சமய அறநிலைத் துறை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து ஒரு ஆய்வு கூட்டம் நடத்த உள்ளோம் அதில் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, என்னென்ன பணிகள் எந்த நிலையில் உள்ளன, அனுமதிக்காத பணிகளுக்கு அனுமதி பெறுதல் , நிதி ஒதுக்கீடு செய்தல் ஆகியவை குறித்து ஆய்வு கூட்டத்தில் விவாதிக்கப்படும். விரைவில் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வகையில் கோவில் திருப்பணிகள் நிறைவடைந்து குடமுழுக்கு நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மத்திய அரசின் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் 26 கோவில்கள் உள்ளன. இதில் ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடத்த தமிழக அரசு மத்திய அரசின் தொல்லியல் துறைக்கு விண்ணப்பித்து உள்ளது. அவர்களும் படிப்படியாக திருப்பணிகள் செய்து வருகின்றனர்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு தொல்லியல் துறைக்கு அழுத்தம் கொடுத்து ஆறு கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ஏனைய கோவில்களில் குடமுழுக்கு நடத்த தொல்லியல் துறைக்கு இந்து சமய அறநிலைத்துறை தொடர்ந்து அழுத்தத்தை கொடுக்கும் என்றார்.

இந்த ஆய்வின்போது. மாநகர செயலாளர் மண்டலம் மூன்றின் தலைவர் மு.மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட இணை ஆணையர் பிரகாஷ், உதவி ஆணையர் லட்சுமணன், தக்கார் ரவிச்சந்திரன், செயல் அலுவலர் வித்யா மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.



இராயபுரம் தொகுதி பனைமரத்தொட்டி பகுதியில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி கடந்தாண்டு பொழிந்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்பையொட்டி, வருங்காலங்ளில் எந்தவித மழை வெள்ளப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் ரூபாய்.60 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் உந்து நிலையம் ( PUMPING STATION) அமைப்பற்கு அடிக்கல் நாட்டினார்.இந்நிகழ்வில் இராயபுரம் பகுதி செயலாளர்கள், இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், வட்ட செயலாளர் என்.கிருஷ்ணன், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மாநகராட்சி அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.